**சார்பு நீதிமன்றம், கீரனூர்**
**முன்னிலை – திரு. C. ராஜேஷ்,** B.A., B.L.,
**சார்பு நீதிபதி, கீரனூர்**

2024–ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ம் நாள் திங்கட் கிழமை
2055 திருவள்ளுவராண்டு குரோதி வருடம் புரட்டாசி திங்கள் 7 ம் நாள்

I.A.3/2023
IN
OS.No.61/2021

1. ஷேக் மொய்தீன்,
2. முகமது பிரோஸ். ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிராக//

நடராஜன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது, கடந்த 21.08.2024 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.J. அமீர்உசேன், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. A. பழனிச்சாமி, B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், மனு அபிடவிட், எதிருரை பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

உத்தரவு

அசல் வழக்கு எண் 61/2018–ல் வழக்குமூலம் இல்லை என்பதாலும், மேற்படி வழக்கு Res–Judicata என்ற கோட்பாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளதை கண்டு வாதியின் வழக்கை நிராகரித்து (Rejection of plaint) உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1 ம் பிரதிவாதி. அசல் வழக்கானது வாதியால் இம்மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்து ஆதியில் முகமது சுல்தான் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். முகமது சுல்தான்

இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளுக்கிடையே திருச்சி சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்ததில் தாவா சொத்தும், தாவா சொத்துடன் கூடிய இன்ன பிற சொத்துக்களும் முகமது சுல்தானின் மனைவி அமீர்பீவி என்பவருக்கு கிடைக்கப்பட்ட பாகச்சொத்தாகும். அமீர்பீவியிடமிருந்து மனுதாரர் கடந்த 20.12.1995 ம் தேதி குளத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1985/1995 ன்படி தகுந்த பிரதிபிரயோஜனம் கொடுத்து கிரையம் பெற்றார். மேலும் அமீர்பீவிக்கு பாத்தியமான தாவா சொத்தின் பகுதி சொத்துக்களையும் மனுதாரரும், மனுதாரரின் குடும்பத்தாரும் கிரையம் பெற்றுள்ளார்கள். மேற்படி தாவா சொத்தில் மனுதாரரின் பெயரில் வருவாய்துறை ஆவணங்களில் பதிவு ஏற்பட்டு அரசுக்கு செலுத்த வேண்டிய வரி, வாய்தாக்கள் செலுத்தப்பட்டு வருகிறது.

2. இதற்கிடையில் கீரனூரை சேர்ந்த பரமசிவம் என்பவர் தாவா சொத்தில் வாடகைதாரராக இருந்து வந்தார். மேற்படி வாடகைதாரரான பரமசிவத்தை தாவா சொத்திலிருந்து காலி செய்து கொடுக்கக்கேட்டு மனுதாரர் கீரனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 105/1996 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் முழு விசாரணைக்கு பின்னர் மனுதாரருக்கு தீர்ப்பும் மற்றும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டு, தாவா சொத்தின் காலி சுவாதீனமும் மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிலையில், தாவா சொத்திற்கு எந்த வகையிலும் உரிமை இல்லாத மேற்படி பரமசிவம் என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லி ஒரு போர்ஜரியான கிரைய பத்திரத்தை கொண்டு வாதி/எதிர்மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் வாதி/எதிர்மனுதாரர் கடந்த 2009 ம் ஆண்டு, கீரனூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இம்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி அ.வ.எண் 42/2009 தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மீண்டும் மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்தைப்பொறுத்து உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வழக்கு மூலம் கிடையாது. மேலும் Resjudicata கோட்பாட்டின்படி தடை செய்யப்பட்டுள்ளதால் அதனை பொறுத்து வழக்கை நிராகரிக்க (to Reject the Plaint) கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP

(PD)(MD)No.2377/2018 மற்றும் CMP (MD) No.10620/2018 மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் கடந்த 10.07.2023 ம் தேதி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11–ன் கீழ் மனுதாரர்களே விசாரணை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பரிகாரம் தேடிக்கொள்ள வாய்பளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

3. இம்மனு நிலைக்கக்கூடியது அல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு நடைபெற்ற வந்ததாகவும், அந்த வழக்குகளின் முடிவினால் இந்த எதிர்மனுதாரருக்கு முன்தீர்ப்பு தடைசட்டத்தால் அசல் வழக்கே பாதிப்படைந்துள்ளதாகச் சொல்லியுள்ள விபரம் சட்டப்படி ஏற்புடையதல்ல. ஏனென்றால், மேற்படி வழக்குகளில் இந்த எதிர்மனுதாரர் தரப்பினர் கிடையாது. தாவா வழக்குச் சொத்திற்கும் ஏற்கனவே வழக்குகள் கிடையாது. மேலும், இந்த எதிர்மனுதாரர் ஏற்கனவே மனுதாரர்கள்மீதும், வருவாய்த்துறையினர் மீதும் தாக்கல் செய்திருந்த O.S.No.42/2009 வழக்கின் தீர்ப்புரையில் 8–வது பக்கத்தில், எழுவினா 2 ல் இந்த எதிர்மனுதாரர் உரிமை விளம்பல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்பதனை சுட்டிக்காட்டித்தான் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதே தவிர, மனுதாரர்களுக்குத்தான் பாத்தியப்பட்டதோ, அனுபவப்பட்டதோ என்று குறிப்பிடப்படவில்லை.

4. மேலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் அசல் வழக்கை Resjudicata என்ற கோட்பாட்டின்படி வழக்கை நிராகரிப்பதற்கு தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்புடையதல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சட்டப்பிரிவுகளில் Resjudicata முறையில் வழக்கை நிராகரிக்க குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை. வழக்குரையை நிராகரிப்பதற்கான காரணங்களும், சாதக சூழ்நிலையும் மனுதாரர்களின் மனுவில் சொல்லப்படவில்லை. மனுதாரர்களின் மனுவில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மதுரை அமர்வில் கடந்த 10.07.2023 ம் தேதி CRP (PD)(MD)No.2377/2018 and CMP (MD) No.10620/2018 ல் பிறப்பித்துள்ள

உத்தரவானது முடித்து வைக்கப்பட்டது கிடையாது. அந்த உத்தரவு மனுதாரர்களுக்குப் பாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விபரத்தை மறைத்து நீதிமன்றத்தை ஏமாற்றி தவறான உத்தரவைப் பெற்றிட மனுதாரர்கள் கெட்ட உள்நோக்கத்துடன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

**6. தற்போது தீர்மானிக்கப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்பட வேண்டியதா? இல்லையா? என்பதேயாகும்.**

7. தாவா வழக்கானது, உரிமை விளம்பல், நிரந்தர தடையாணை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பில் ஒரு சாட்சி முன்னிடப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஏற்கனவே வாதியால் 42/2009 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததாகவும், அந்த வழக்கு உரிய விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், அதை மறைத்து வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்கண்ட வழக்கு தீர்ப்பினால் இவ்வழக்கு முன்தீர்ப்பு தடை கோட்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டது. அதற்கு மாறாக, அ.வ.எண் 42/2009 வழக்கானது விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டதாகக் கூறி தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதனால் இவ்வழக்கு முன் தீர்ப்பு தடை தோசத்தால் பாதிக்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தரப்பில் வாதம் எடுத்துரைக்கப்பட்டது.

8. பொதுவாக, ஒரு வழக்கு பிராதை நிராகரிக்க வேண்டுமெனில் கீழ்குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில்தான் நிராகரிக்க வேண்டுமென உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11 ல் கூறப்பட்டுள்ளது.

*Rejection of plaint: The plaint shall be rejected in the following cases:*
*(a) Where it does not disclose a cause of action;*

*(b) Where the relief claimed is undervalued, and the plaintiff, on being required by the court to correct the valuation within a time to be fixed by the court, fails to do so;*

*(c) Where the relief claimed is property valued but the plaint is written upon paper insufficiently stamped, and the plaintiff, on being required by the court to supply the requisite stamp-paper within a time to be fixed by the Court, fails to do so;*

*(d) Where the suit appears from the statement in the plaint to be barred by any law;*

*(e) Where it is not filed in duplicate;10.5 pt*

*(f) Where the plaintiff fails to comply with the provisions of rule 9*

*(Provided that the time fixed by the Court for the correction of the valuation or supplying of the requisite stamp-papers shall not be extended unless the court, for reasons to be recorded, is satisfied that the plaintiff was prevented by any cause of an exceptional nature from correcting the valuation or supplying the requisite stamp papers, as the case may be, within the time fixed by the court and that refusal to extend such time would cause grave injustice to the plaintiff.)*

9. அதன்படி பார்க்கையில், இவ்வழக்குரையானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 11ல் கூறப்பட்டுள்ள கோட்பாடுகளுக்குள் அடங்கவில்லை என தெளிவாகின்றது. மேலும், எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி அ.வ.எண் 42/2009 வழக்கானது உரிமை விளம்புகை கோரவில்லை என்ற காரணத்தினாலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண் 42/2009 வழக்கின் தீர்ப்புரை பத்தி 8 ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

*வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார். ஆனால், உரிமை விளம்பல் பரிகாரம் இவ்வழக்கில் கோரவில்லை. ஆனால், வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில், வாதி வா.சா.ஆ.1ன் மூலமும், 3ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ.11, 12-ன் மூலமும் உரிமை கோருவது தெரியவருகிறது. எனவே, வாதி உரிமை விளம்பல் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும், ஆனால், வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.*

எனவே அ.வ.எண் 42/2009 வழக்கு உரிமை விளம்புகை கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது, வாதியால் உரிமை விளம்புகை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதை பொறுத்து, உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 11ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

*Res Judicata: No Court shall try any suit or issue in which the matter directly and substantially in issue has been directly and substantially in issue in a former suit between the same parties, or between parties under whom they or any of them claim, litigating under the same title, in a Court competent to try such subsequent suit or the suit in which such issue has been subsequently raised, and has been heard and finally decided by such Court.*

10. ஆகையால், ஒரே தரப்பினர்களுக்கிடையே ஒரே சொத்தை பொறுத்து ஒரு பிரச்சனையை பொறுத்து தீர்வு எட்டப்பட்டபிறகு அதே பிரச்சனைக்காக மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்தால் பின்னர் தாக்கல் செய்யப்படும் வழக்கானது முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கை பொறுத்தமட்டில் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்பதற்காகவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே வாதியால் விளம்புகை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் இவ்வழக்கானது முன்தீர்ப்பு தடை கோட்பாட்டால் பாதிக்கப்படவில்லை என்றும், இவ்வழக்கு பிராதை நிராகரிப்பதற்கு உரிய முகாந்திரம் இல்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆகையால், நீதியின் நலன் கருதி இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

**இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகின்றது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/– C. ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

Sd/– C. ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.